வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C No.142/2021

வழக்கு சாட்சி – PW–5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திருமதி.தேவி | தொழில் | :: |
| த/க | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 06.07.2024.

1, 2 எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை (நேரம் : காலை 11.35 மணி)

நான் தற்போது மண்டபம் இந்திரா நகரில் குடியிருநது வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1, 2, 3 சாட்சிகளை தெரியும். அவர்கள் வீட்டில்தான் நான் வாடகைக்கு குடியிருந்தேன். ஆஜர் எதிரிகள் மீது அ.சா.1 மோகன் ராஜ் கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் தங்கச்சிமடத்திலுள்ள மீன் கம்பெனிக்கு வேலைக்கு செல்வேன். காலையில் சென்றுவிட்டு மாலையில்தான் வருவேன். அதனால் அ.சா.1 எதிரிகள் மீது கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் கடந்த 30.03.2021 ஆம் தேதி அ.சா.1 மோகன்ராஜ் என்பவரின் வீட்டில் குடியிருந்தேன். அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் அ.சா.1 மோகன்ராஜ் வீட்டில் அசிங்கமாக பேசும் சத்தம் கேட்டு நானும் , லெட்சுமி என்பவரும் சென்று பார்த்தபோது 1 ஆம் எதிரி கௌசல்யா அ.சா.1 மோகன்ராஜின் மனைவியை பார்த்து கெட்ட வார்த்தையால் அசிங்கமாக திட்டினார் என்றும் அப்போது 2 ஆம் எதிரி துரை என்பவர் அருவாளுடனும் மற்றொரு நபர் கையில் வாளுடனும் வந்து அ.சா.1 மோகன்ராஜை பார்த்து அவனை வெட்டிக்கொன்றால்தான் எங்களுக்கு சொத்து கிடைக்கும் என்று சொல்லி மிரட்டியதாகவும் எங்களை பார்த்து மேற்படி வீட்டில் குடியிருக்கக்கூடாது என்றும், வீட்டை காலி செய்யும் படி மிரட்டியதாகவும் சம்பவம் குறித்து தனக்கு நேரடியாக தெரியும் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக எதுவும் தெரியாது என்று உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.